கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கிறார்

தூத்துக்குடி வடக்கில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, செப். 14- செப்டம்பர் 15ம் தேதி பேரறிஞர் அண்ணாவின் 115வது பிறந்த நாள், தூத்துக்குடியில் அவரது திருவுருவச் சிலைக்கு தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என்று தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத்தை தோற்றுவித்தவரும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு கற்றுத் தந்தவரும், தமிழ் இனம், தமிழ் மொழி என்ற உணர்வு மிக்க கருத்துக்களை மக்களிடம் பரப்பி தமிழருக்கு பாதுகாப்பு இயக்கமாக தி.மு.கழகத்தை மாற்றி அதன் மூலம் கழக ஆட்சியை தமிழ்நாட்டில் அமைத்தவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்,

அவர் முதலமைச்சராக இருந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழ்நாடு என பெயர் மாற்றம், இருமொழிக் கொள்கை, சுயமரியாதை திருமணச் சட்டம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தார்.

அன்னாருடைய 115 வது பிறந்தநாள் வருகிற செப்டம்பர் 15ம் தேதி வெள்ளிக்கிழமையன்று வருகிறது. அன்றைய தினம் காலை 8:30 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தூத்துக்குடி பாளைரோடு - காய்கனி மார்க்கெட் சந்திப்பில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் முழு உருவச் சிலைக்கு தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமிகு. கனிமொழி கருணாநிதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் ஊராட்சி மற்றும் வார்டு கழகச் செயலாளர்க, பகுதி கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் - மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.செப்.14. நெல்லை சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு நாளை 15.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நெல்லை சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு நாளை (15.09.2023 வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இதில் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள். எனவே கழக மாநில, மாவட்ட,மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்,வட்டக்,கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்காசி தெற்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!

தென்காசி.செப்.14- தென்காசி தெற்கு மாவட்ட கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளை முன்னிட்டு குற்றாலத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு நாளை (15.09.2023-வெள்ளிக் கிழமை) காலை 930 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மாவட்ட கழகம் மற்றும் மருத்துவ அணி சார்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கபட உள்ளது.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை எடுத்துரைத்து அதன்படி வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வெகு சிறப்பாக கொண்டாடப்படும் வகையில் நாளை (15.09.2023 - வெள்ளிக்கிழமை)காலை 9:30 மணி அளவில் குற்றாலத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த சிறப்புமிக்க நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட,கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள்,ஒன்றிய,நகர,பேரூர், கிளை கழக செயலாளர்கள்,நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்று பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்து தென்காசி தெற்கு மாவட்டம் மற்றும் மருத்துவ அணி சார்பில் தென்காசி தொகுதியில் உள்ள சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஆலங்குளம் தொகுதி கோவிலூத்து ஆரம்ப சுகாதார நிலையம் கடையநல்லூர் தொகுதி வல்லம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வுகளிலும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா 115வது பிறந்த நாள் விழா!

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.செப்.14- தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் வைத்து நாளை 15.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படு கிறது.என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது அறிவிப்பு விவரம் வருமாறு.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை எடுத்துரைத்து அதன்படி வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் வெகு சிறப்பாக கொண்டாடப்படும் வகையில் நாளை (15.09.2023-வெள்ளிக்கிழமை) காலை 9:30 மணி அளவில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் வைத்து பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

கலைஞரின் உரிமை தொகைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உரிமை தொகை 1000 போன்ற வாசகங்களை எழுதி கோலமிட வேண்டும்.அனைத்து ஒன்றிய,நகரம்,பேரூர், கிளை கழகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படம் வைத்து மாலை அணிவித்து, இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

இந்த சிறப்பு மிக்க நிகழ்ச்சியில்மாநில, மாவட்ட,கழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு,பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள்,நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்று பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவை சிறப்பிக்க வேண்டும்.

தென்காசி வடக்கு மாவட்ட சார்பில் நடைபெறும் அனைத்து நிகழ்வு களிலும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று (13.09.2023) பள்ளி கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் மாவட்ட கவுன்சிலர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கே.கதிரவன் புகலூர் ஒன்றிய குழு துணை தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய கவுன்சிலர், தலைமை ஆசிரியர் மருதுபாண்டி உட்பட ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தீ பரவட்டும்! ஆரிய மாயை அகலட்டும்!

காஞ்சிபுரம்!

பேரறிஞர் பலரை உலகிற்கு தந்து, பெரும்புகழ் கொண்ட மாநகரம்!

தறி ஓசையும், தமிழோசையும் எங்கும் ஒலிக்கும் உன்னதத் தலம்! கல்லிலே கலை வண்ணம் கண்ட பல்லவ மன்னர்களின் தலைநகரம்!

இத்தகு சிறப்புகள் கொண்ட காஞ்சியில், என்றுமே மறையாப் புகழ் கொண்ட நமது மன்னவர், தென்னவர் போற்றும் தென்னாட்டு காந்தி, அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் தோன்றினார்.

உலகில் தோன்றிய அத்தனை தலைவர்களும் தம்மகத்தே கொண்டிருந்த தனிப்பட்ட சிறப்புகள் அனைத்தும் தன்னகத்தே ஒருங்கே அமைந்த மாபெரும் மனிதநேயப் புனிதர் மாமேதை அண்ணா அவர்கள்.

பாட்டும், பரதமும், கோட்டும், குடியும் பரிமளித்த அரசியலில், அழுக்கு வேட்டியும், அனல் கக்கும் பேச்சும், அடுக்குமொழி வீச்சும் அரங்கேற அடித்தளமிட்டவர் அண்ணா.

எண்ணிய எண்ணம் ஈடேற, எதையும் செய்ய எத்தனித்த எத்தர்கள் மத்தியில், இதய சுத்தியோடு எவர் மனமும் நோகாமல், இலட்சிய மலர் பறித்த இயக்கத் தலைவர் அண்ணா.

மேடையில் வீசிடும் மெல்லியப் பூங்காற்றாய், இலக்கிய அரங்குகளிலும், அரசியல் மேடைகளிலும், கல்லூரி கலா மண்டபங்களிலும், இனிய, எளிய சொல்லாட்சி மூலம் சுவைபட பேசி, கேட்போரை சொக்க வைத்து, எதிரிகளை விக்க வைத்து, தன்பால் ஈர்த்த சொல்லின் வல்லவர் நமது அண்ணா அவர்கள்.

சௌமியன், சமதர்மன், சம்மட்டி, ஒற்றன், ஆணி, பரதன், நக்கீரன், குறிப்போன், வீரன், வீனஸ் எனும் புனைப்பெயர்கள் கொண்டு, இருட்டு மனிதர்களின் புரட்டு செயல்களை திரை விளக்கி, ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய எழுத்து வேந்தர் அண்ணா அவர்கள்.

சரித்திர பின்புலம், சாம்ராஜ்ய பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்தால், தூய லட்சியங்களை ஏற்று, அறிவுநடை தமிழால், ஆரியத்தின் வேரறுத்து அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர்படை முரசொலிக்க, வெற்றியுலா வந்தவர் நமது தென்னகத்து கோமகன் அறிஞர் அண்ணா அவர்கள். தனது தீர்க்கமான பேச்சால், எழுத்தால், வாதத்திறமையால், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் எளியோர் காவலனாய், நலிவுற்றோர் துயர் துடைத்த நல்லாட்சி நாயகராய், நாடோரும், நல்லோரும் போற்ற ஆட்சி தந்தார். எளிமையின் மாட்சி தந்தார்.

இவ்வாறு நாம் பெருமை கொள்ளும் பேரறிஞர் அண்ணா அவர்கள் குடும்பப் பாச உறவை, இயக்கத்தில் ஏற்படுத்தி, தன்னை தாழ்த்தி, தம்பியரை உயர்த்திய அண்ணாவை, தோழர்கள் எவரேனும் பாராட்டி பெருமை பேசுகையில், அந்தப் பெருமைகளுக்கெல்லாம் காரணம் நீங்கள் தான் என்பார்.

குறைகாணுவது போல் எவரேனும் பேசிவிட்டால், அதற்கும் தானே பொறுப்பேற்று, “என்ன செய்ய? நான் ஐந்தடி உயரம் தான். என்னால், இவ்வளவு தான் எட்டமுடிகிறது. இதற்கு மேல் எட்ட முடியவில்லை” என்பார்.

வழக்கறிஞர்.
வெ.அன்புவாணன்
கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்.

முனிசிப்பாலிடி உறுப்பினர் வெற்றிக்குக் கூட முழுப் பொறுப்பு நானே! என்று தற்பெருமைக் குரல் ஒலித்திடும் இந்நாளில், லட்சோப லட்சம் மக்கள் கடல் தனது ஆணைக்கு கட்டுப்பட காத்திருந்தும், எனக்காக நீங்கள் அல்ல! உங்களுக்காக நான்! அதுகூட தவறு. உங்களால் தான் நான்! என்ற அடக்கம் மிகுந்த அண்ணாவின் பணிவை எண்ணிப் பார்த்திடில், மெய் சிலிர்க்கிறதன்றோ!

லட்சக்கணக்கான தம்பியர் தனது விழி அசைவிற்கு காத்திருப்பினும், அதில் பெருமை கொள்ளாத பணிவு அண்ணா அவர்களுக்கே உரிய அரிய அணிகலனாகும்.

தென்னகத்து அரசியல் வானில் திருப்பங்கள் ஏற்படுத்தி, சரிகை குல்லாய்களும், சமஸ்தானத்து ராஜாக்களும், சந்தன மாலைகளும் கோலோச்சிய அரசியலில், “தம்பிக்கு கடிதங்கள்! என விளித்து, அதை படிக்கும் ஒவ்வொரு இளைஞனும் தனக்காகவே அண்ணா மடல் தீட்டியதாக எண்ணி மகிழ்ந்திடும் வண்ணம் தனது எழுத்தில் ஈரவரிகளை, தவழவிட்டு, தமிழர்களின் வரலாற்றை, இலக்கியத்தை, காதலை, வீரத்தை, வெற்றியை, அவர்கள் ஏந்தி சுழற்றிய வாளின் ஒளி, எடுத்து வீசிய ஈட்டியின் ஓசை, ஏற்படுத்திய தமிழ் மறவர் தமது கம்பீரத்தை சொல்லி, தமிழ் மொழி காக்க தடந்தோள் உயர்த்திட தம்பிகளை தயார் படுத்திய தளபதி நமது அண்ணா அவர்கள்.

ஈரோடு குருகுலத்தில் தனது அறிவைக் கூர்படுத்தி, எவரையும் எளிதில் பாராட்ட நினையாத தனது ஆசான், தலைவர் பெரியார் அவர்களே, அண்ணா அவர்கள் விடுதலை ஏட்டில் எழுதிய “ரிப்பன் கட்டிடத்து சீமான்கள்!” எனும் தலையங்கத்தால் ஈர்க்கப்பட்டு, தள்ளாத வயதிலும் மூன்று மாடி ஏறி வந்து பாராட்டும் அளவிற்கு அனல் கக்கும் எழுத்தாற்றல் நமது அண்ணா அவர்களுக்கு இயற்கையாகவே வசமானது.

இத்தகைய எழுத்தாற்றல் மூலம் சமுதாயத்தில் முடை நாற்றம் வீசிய தீண்டாமை, பெண்ணடிமை இவற்றை, அவற்றின் ஆணிவேரே கருகும் வண்ணம் சாடினார் அண்ணா.

தீண்டாமை எனும் கொடுமையால், இந்தியாவே கோடிக்கணக்கான மக்களை கோயில்களில் நுழைய விடாமல் தடுத்த கொடுமையை, அண்ணா வன்மையாகக் கண்டித்தார்.

“வீணையை மீட்டத்தொடங்கியதும், இசை கேட்க வருபவரின் காதுகளை அடைப்பதுபோல, எழில்மிகு சித்திரவதை தயாரித்து, காணவாரீர்” என அனைவரையும் அழைத்து, சிலரின் கண்களைக் கட்டிவிடுவது போல, பழச்சாற்றின் இனிமையைக் கூறி, பருகக் கொஞ்சம் தருக! என்று கேட்பவரை விரட்டுவதுபோல், ஆலயங்களின் மேன்மையையும், மகிமையையும், பலனளிக்கும் சக்தியையும் சொல்லி விட்டு, அங்கு வரக்கூடாது என்று சிலரை அல்ல, ஏறத்தாழ 90 சதவிகித மக்களும் தடுக்கப்பட்டு வரும் இழிநிலையை தனது எழுத்தின் மூலம் சாடினார்.

தீண்டாமையை போன்றே, சமூகத்தில் புரையோடிப் போன பெண்ணடிமை எனும் கொடுஞ்செயலை, பெண்ணுரிமைக்கு எதிராக வரும் எதிர்ப்புகளை ஒடுக்கி வைக்க, அடக்கி வைக்க, திருத்தி வைக்க, கலை, இலக்கியங்களை போர் கருவிகளாகப் பயன்படுத்தினார். தனது நாடகப் பெண் பாத்திரங்களை முதன்மைப் படுத்தி, முழங்க வைத்தார்.

பாவையின் பயணம் நாடகத்தில் - வனஜா!
காதல் ஜோடி நாடகத்தில் - பொற்கொடி!
ஓர் இரவு நாடகத்தில் - சொர்ணம்!
வேலைக்காரி நாடகத்தில் - அமிர்தம்!
சந்திரோதயம் நாடகத்தில் - சந்திரா!

போன்ற பெண் பாத்திரப் படைப்புகள் மூலம் பெண்ணினத்தை அடிமைப் படுத்திய முதலாளித்துவ, ஆணாதிக்க செல்வந்தர்களுக்கு எதிராக தனது எழுத்தின் மூலம்போர் முழக்கம் செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அக்ராசனாதிபதியும், அபேட்சகரும் ஆளுமை கொண்டிருந்த அரசியலில், அண்ணன் தம்பி பாசத்தோடு அவைத்தலைவர் என விளித்த அருந்தமிழ் காவலர் அண்ணா அவர்கள்.

வற்றாத வளங்கள் கொண்ட தென்னகம் வடவரின் சூழ்ச்சியால் எத்துறையிலும் புறக்கணிப்பட்டதை,

இங்கே,
வெட்டினால், வெள்ளி!
தட்டினால், தங்கம்!
இடித்தால், இரும்புவளம்!

என ஆதாரத்தோடு அடுக்கு மொழியில் வாதிட்ட மண்ணின் மைந்தன் நமது அண்ணா.

இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் பாத்திரமான பாசமிகு தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான இந்நன்நாளில் அவரே சொன்னது போல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணி இன்னும் ஓர் ஐம்பதாண்டிற்கு தேவை தான் படுகிறது. ஆட்சியதிகாரம் பெற்றும், அன்றிருந்த சனாதன சந்தடிகள், தமது கோர முகத்தை பல ரூபங்களில் காட்டியே வருகின்றன. பெரியார், அண்ணா, தலைவர் கலைஞர், தமிழினத் தளபதியவர்களைத் தொடர்ந்து, திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை! நமது இளைஞரணிச் செயலாளர் மிஸ்டர் 10 கோடி என்று ஏக இந்தியாவிற்கே எடுத்துச் செல்லப்பட்டு, பிரம்மிப்பூட்டிய அமைச்சர் உதயநிதி அவர்கள் வரை பகுத்தறிவு தீபம் ஏந்தி, படை நடந்தி, பகை முடிக்கும் பணி தொடரோட்டமாய்தொடர்கிறது.

அரசியல் களமென்பது, படமெடுத்தாடும் பாம்புகள் நிறைந்த பாதைகள் நிறைந்ததென்பது தலைவர் கலைஞர் குல குழந்தைகளுக்கும் பாலபாடம் என்பதை அறியாத சில சங்கி, மாங்கி, சன்னியாசி, சாமியார் கூட்டங்கள் சவடால் விடுகின்றன.

தென்றலைத் தீண்டாமல் தீயினைத் தாண்டிய தமிழினப் போராளி தலைவர் கலைஞரின் தடம் பற்றி, ஆட்சி, கட்சி நடத்தும் தளபதியவர்கள் கொண்ட கொள்கையில் கண்ட உறுதியை தானும் ஏற்று, அன்று தலைவர் கலைஞர் அவர்கள் முழங்கிய

நடை தள்ளாடலாம்!
தடைபடலாம்!
முடிவுற்றுப் போய்விடலாம்! ஆனால்,
கொண்ட அந்த உணர்வுகட்கு,
தடையில்லை!
தள்ளாட்டமில்லை!
முடிவு இல்லை!
இல்லவே, இல்லை!

என்ற கொள்கை உறுதியோடு வளம் வந்து, இன்று சனாதன மூடப் பழக்க, வழக்கங்களுக்கு சம்மட்டியடி கொடுக்கிறார். அவரது பேச்சில், அனல் கக்கும் வீச்சில் பொசிங்கிப்போனது போலி காவி கூட்டம்.

அடுத்து என்ன வரும்? ஆனது ஆகட்டும்! என்கிறார் முதல்வர்.

அதை அப்படியே தனது பயணங்களில், பதிவிடும் கருத்துகளில் பரிமளிக்கிறார் நமது அமைச்சர் உதயநிதி அவர்கள்.

அண்ணாதான் சொன்னார்;
பதவி எங்களுக்கு தோளில் போடும் துண்டு!

நாங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையோ, இடுப்பில் அணியும் வேட்டி!

நான் பதவியெனும் துண்டை இழப்பேனேயன்றி, ஒரு நாளும் கொள்கை எனும் வேட்டியை இழக்க மாட்டேன் என்று.

இடையே எத்தனை ஆண்டுகள் காலத்தின் கரங்களில் கடந்தேபோனாலும், நீர்த்துப் போகாத, நிலையான பகுத்தறிவுப் பாதையில் பயணிக்கும், தலைவர் தளபதி, இளைஞர்களின் எதிர்கால நம்பிக்கை உதயநிதி ஆகியோரின் கரங்களை பலப்படுத்த நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இந்தப் பிறந்தநாளில் உறுதியேற்போம்!

பகுத்தறிவு தீ பரவட்டும்!
சனாதன ஆரிய மாயை அகலட்டும்!
ஓங்கட்டும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பெரும்புகழ்!